1995 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995—96*-ஆம் ஆண்டிற்கான பகுதி—2 திட்டத்தின் கீழ் பழுதடைந்த பாலங்களை திரும்ப கட்டுதல் என்ற தலைப்பின் கீழே இந்த பாலத்திற்கு *50* இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பாலம் இந்த ஆண்டு கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) காகித விலையேற்றத்தினால் நோட்டுப் புத்தகங்களுக்கும், பாடப் புத்தகங்களுக்கும் விலை உயர்வு ஏற்படும் நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாயந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே. மரியம் உல் ஆசியா.

***திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வெளிநாடுகளுக்கு காகிதம் ஏற்றுமதி அதிக அளவில் செய்வதாலும் மத்திய அரசு காகித விலையை உயர்த்தியதாலும் தமிழ்நாட்டில் நோட்டு புத்தகங்களுக்கும் பாடப் புத்தகங்களுக்கும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால், விலை உயர்வு ஏற்படும் நிலை குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

மைய அரசு பாடநூல் மற்றும் குறிப்பேடுகளுக்கு *1990* மார்ச் வரை சலுகை விலையில் தாள் ஒதுக்கீடு செய்து வந்தது. *1-4-1990*-க்கு பிறகு மைய அரசின் சலுகை விலைத்தாள் ஒதுக்கீடு செய்வது

நிறுத்தப்பட்டதால் பாடநூல்களுக்கும், குறிப்பேடுகளுக்கும் வெளிசந்தையில் தாள் கொள்முதல் செய்யப்பட்டு வந்துள்ளது.

பாட நூல்களை பொறுத்தவரை தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு காகித ஆலை மூலம் மட்டுமே தாள் பெறப்பட்டு அச்சிடப்பட்டு வருகிறது. சென்ற வருடத்தில் *(1993-94)*ல் வாங்கிய விலையைவிட இந்த ஆண்டிற்கு *(1994-95)* ஒரு டன்னிற்கு ரூ. *2400/- (12* சதவீதம்) கூடுதல் செய்யப்பட்டிருந்தாலும், நாட்டுடமை ஆக்கப்பட்ட பாடநூல்களின் விலையை கூடுதல் செய்யாமல் சென்ற ஆண்டின் விலையிலேயே இந்த ஆண்டிலும் விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பேடுகளை பொறுத்தவரை சலுகை விலைத்தாளினை மைய அரசு ஒதுக்கீடு செய்வதை நிறுத்தியதின் காரணமாகத் தொடர்ந்து, வெளிச்சந்தையில் குறிப்பேடுகள் விற்கப்படுவதும் நிறுத்தப்பட்டது. ஆனால் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் பயன் பெறும் மாணவர்களுக்கு மட்டும் வெளிச்சந்தையில் தாள் கொள்முதல் செய்யப்பட்டு குறிப்பேடுகள் தயாரித்து அத்துறைக்கு வழங்கி வரப்படுகிறது. சென்ற ஆண்டின் *(1994-95)* கல்வி ஆண்டு மட்டும் மீண்டும் வெளிச்சந்தையில் குறிப்பேடு தயார் செய்யப்பட்டு ரூ. *90* இலட்சம் மதிப்புள்ள *350* டன் தாளினை குறிப்பேடுகளாக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் விற்றது. இந்த ஆண்டில் வெளிசந்தையில் விற்க ஏதுவாக *500* டன் தாளினை குறிப்பேடுகளாக விற்க ஏற்பாடு செய்யப்பட்டது. தாள் விலையில் ஏற்றம் காரணமாக மாணவ/மாணவியர்களுக்கு குறிப்பேடுகள் தட்டுப்பாடு ஏற்படும் என்பதை எதிர்நோக்கி மேலும் கூடுதலாக *500* டன் குறிப்பேடுகள் (ஆக மொத்தம் *1000* டன்) தயார் செய்ய தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனைத் தவிர சென்ற ஆண்டுவரை வழங்கி வந்தபடி ஆதி திராவிடர் நலத்துறை மூலம் பயன்பெறும் மாணவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கவும் தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

காகித விலையேற்றம் மாணவ சமுதாயத்தை எந்த வகையிலும் பாதிக்காமல் இருக்க இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பிப்ரவரி மாதத்திலேயே பள்ளிகளுக்குத்

1995 மார்ச் 28] [திருமதி கே. மரியம் உல் ஆசியா]

தேவையான நோட்டுப் புத்தகங்கள் கடைகளுக்கு வந்துவிடும். இந்தத் தடவை நோட்டுப் புத்தகங்கள் மார்ச் மாதம் ஆகியும் வரவில்லை. மதுரை, சென்னை, கோவை, சேலம், வேலூர், கும்பகோணம் ஆகிய பகுதிகளில் சுமார் 400 நிறுவனங்கள் நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பில் ஈடுபடுகின்றன. பள்ளிகள் மேற்கண்ட நிறுவனங்களுக்குக் கொடுக்கும் ஆர்டர்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் தொழிலையே விட்டுவிடக் கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டு இருப்பதாகக் கூறுகிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நோட்டுப் புத்தகத் தயாரிப்புக்கு குறைந்தது 20 ஆயிரம் டன் பேப்பர் ஆண்டுதோறும் தேவைப்படுகிறது. சர்வதேச சந்தையில் இந்தியக் காகிதத்தின் விலை மலிவாக இருந்தாலும் காகித ஆலைகள் வெளிநாடுகளுக்குத்தான் அதிக காகித ஏற்றுமதி செய்கின்றன. ஆகவே இங்கே காகிதத் தட்டுப்பாடு நிலவுகின்றது. 1975, 76 ஆகிய ஆண்டுகளில் காகித விலை ஏற்றமும், காகிதத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. அப்போது மத்திய அரசு தலையிட்டு சீனா, இத்தாலி போன்ற வெளிநாடுகளிலிருந்து காகிதத்தை இறக்குமதி செய்து .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மரியம் உல் ஆசியா, கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பாளர்களுக்கு சலுகை விலையில் வரி விலக்குடன் வழங்கியது. விவர அறிக்கையில் பாட நூல் மற்றும் குறிப்பேடுகளுக்கு 1990 மார்ச் வரை சலுகை விலையில் தாள் ஒதுக்கீடு செய்து வந்ததாகவும் 1-4-1990-க்குப் பிறகு சலுகை விலையில் கொடுப்பது நிறுத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவ சமுதாயத்தினுடைய நலன் கருதி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலான தமிழக அரசு இதுபோன்ற பாடநூல் மற்றும் குறிப்பேடுகளுக்கு மத்திய அரசு ஏற்கெனவே சலுகை விலையில் காகிதம் கொடுத்தது போல் மீண்டும் கொடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-55*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மத்திய அரசை எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் வலியுறுத்தினாலும், சலுகை

விலையிலே தருவதை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். கடந்த நான்காண்டுக் காலமாக வெளிச்சந்தையிலேதான் தாள் பெறப்பட்டு பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் தயார் செய்யப்படுகின்றன. *93—94* ஐவிட, *94—95* இல் *12* சதவீதம், அதாவது ஒரு டன்னிற்கு *2400* ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், சென்ற ஆண்டு விலையிலேதான் பாடப் புத்தகங்கள் விற்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணையை ஏற்று, தமிழ்நாடு பாடநூல் கழகம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

குறிப்பேடுகளைப் பொறுத்தவரை, இதற்கு முன்னால் சலுகை விலையிலே தாள் கொடுத்தபோது எல்லோருக்குமே வழங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் சலுகை விலைத் தாள்கள் நிறுத்தப்பட்டவுடன், ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாகப் பயன் பெறுகிற மாணவர்களுக்கு மட்டும், வெளிச்சந்தையிலே தாள் கொள்முதல் செய்யப்பட்டு குறிப்பேடுகள் தயாரித்து அத்துறைக்கு வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் ஏறத்தாழ *90* இலட்சம் ரூபாய்க்கு *350* டன் தாளைப் பெற்றுக் குறிப்பேடுகளாகத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் விற்றது. இந்த ஆண்டில் தட்டுப்பாடு வரும் என்பதை உணர்ந்து, அப்படிப்பட்ட தட்டுப்பாடு வந்து விடக் கூடாது என்பதற்காக *500* டன் தாள் வாங்குவதற்குச் செய்திருந்த ஏற்பாட்டை, இப்பொழுது *1,000* டன் வாங்குவதற்காக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மத்திய அரசு எவ்வளவுதான் வற்புறுத்தினாலும், மக்களுக்கு அளிக்கப்பட்ட எந்தச் சலுகையும் தடைபடக்கூடாது, திரும்பப் பெறக் கூடாது என்று எண்ணுகிற கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் பெறுவதில் மாணவ சமுதாயம் எந்தவகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

அந்த ஆணையை ஏற்று, தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் தக்கவாறு முன்னேற்பாடு செய்திருக்கிறது. எனவே, தட்டுப்பாடு வராது. மாணவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் கவலைப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

1995 மார்ச் 28]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகளுக்கு வரி விதிக்கவில்லை. ஆனால், மத்திய அரசு அந்த மாதிரி நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான் காகித விலை அதிகமாகப் போய்விட்டது. ஆகவே, மத்திய அரசை மாநில அரசு எவ்வளவு தூரம் வற்புறுத்தினால் அவர்கள் மானிய விலையில் நமக்குக் காகிதம் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். **அது எனக்கு ஆதார பூர்வமாகத் தெரியும். ஆகவே, தனியார் பள்ளிக்கூடங்களுக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்பதற்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள் ?

திரு. இரா. தாமரைக்கனி : ஆதாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே கொடுத்திருக்க வேண்டும். வேறு கேள்வி கேளுங்கள். அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : ஆகவே, தனியார் பள்ளிக் கூடங்களுக்கு வழங்குகிற, அந்தப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் படிக்கக் கூடிய பாடப் புத்தகங்களையும் இந்த மானிய விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதுமட்டுமல்லாமல் வருகிற ஆண்டிலும் இந்தப் பாடப் புத்தகத்தை இந்த விலையிலே கொடுப்பதற்கு இப்பொழுதே மலிவு விலையில் காகிதங்கள் கிடைக்கிற காரணத்தினால், அரசாங்கக் காகிதத்தாள் கிடைக்கிற காரணத்தினால் காகித ஸ்டாக் வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு பாடப் புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் சென்ற ஆண்டு விலையிலேயே தருவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்தது. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வாயிலாகப் பாடப் புத்தகங்களை, பாட நூல்களை மட்டும் சென்ற ஆண்டு விலைக்கே தருவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; நிச்சயமாக மாணவர்கள் சென்ற ஆண்டு விலையிலேயே புத்தகங்களைப் பெறுவார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.